

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.3.2025) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு சந்தித்து, 2023–24ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தமிழ்நாடு அரசின் பங்காதாயத் தொகையான 1 கோடியே 21 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) தி.ந. வெங்கடேஷ், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் ஆர். செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.3.2025) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் சந்தித்து, மதுரையில் 2.4.2025 முதல் 6.4.2025 வரை நடைபெறவுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.3.2025) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் நகராட்சி மன்றத் தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் சந்தித்து, இராமநாதபுரம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.3.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### இலங்கை கடற்படையினர் தமிழ்நாடு மீனவர்கள் மீது தொடர் தாக்குதல்!

# முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்திடுக!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, மார்ச் 29 -

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் அதிகளவில் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், முத்தரப்பு பேச்சைவார்த்தைக்கு ஏற்பாடு செய்யவும், இலங்கைச் சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட அனைத்து தூதரக மற்றும் சட்ட உதவிகளை வழங்கிடவும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 11 மீனவர்களை 27.3.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் அதிகளவில் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், முத்தரப்புப் பேச்சைவார்த்தை நடத்திட ஏற்பாடு செய்யவும், இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய தூதரக மற்றும் சட்ட உதவிகளை வழங்கிட வேண்டுமென்று வலியுறுத்தி, முதலமைச்சர்.மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (27.3.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் 27.3.2025 அன்று, இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 11 மீனவர்களும், அவர்களது மீன்பிடிப் படகும் சிறைபிடிக்கப்பட்டுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினர் கடந்த 3 மாதங்களில், 11 வெவ்வேறு சம்பவங்களில் 147 மீனவர்கள் மற்றும் 19 படகுகளை சிறை பிடித்துள்ளதை தனது கடிதத்தில் வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழலில், 2024 டிசம்பர் மாதம் இலங்கை அதிபர் இந்தியாவிற்கு வருகை தந்தபோது, நமது மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படும் பிரச்சனையை இலங்கை அதிபரிடம் தனிப்பட்ட முறையில் எழுப்பியதாகவும், இந்திய மீனவர்களின் நலனை உறுதியாகக் காப்பதில் ஒன்றிய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் தனது 09.02.2025 நாளிட்ட கடிதத்தில் உறுதியளித்திருந்தபோதிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடந்த சில மாதங்களில் அதிகரித்துள்ளதை தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நமது மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யவும், தூதரக முயற்சிகளைத் தீவிர ப்படுத்துமாறு விடுத்த தனது முந்தைய கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை சிறையில் வாடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க தேவையான அனைத்து தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சட்ட உதவிகளை வழங்குமாறும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இந்தியா - ரஷ்யா கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி!

## போர்க் கப்பல்கள் சென்னை வருகை!

சென்னை, மார்ச் 29 –

இந்தியா – ரஷ்யா கடற்படை களின் கூட்டுப் பயிற்சிக்காக போர்க்கப்பல்கள் சென்னைக்கு வருகை தந்துள்ளன. ரஷ்ய நாட்டில் 3 போர் கப்பல்கள் தற்போது தமிழ்நாட்டின் கடலோர பகுதியான சென்னை துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளன.

ரஷ்யாவின் 3 போர் கப்பல்கள் மற்றும் இந்திய கடற்படையின் கப்பல்கள் என இரு நாட்டு தரப்பினரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து கடற்படைக்கான கூட்டுப்பயிற்சி மேற்கொள்வதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியா – ரஷ்யாவின் கடற்பயிற்சியால் பசுபிக் பெருங்கடல் சென்றுள்ள அநேக கப்பல்கள் சென்னை திரும்புகின்றன.

ரஷ்யாவின் பசுபிக் பெருங்கடல் போர் கப்பல்கள் தான் இந்த கூட்டு பயிற்சிக்காக சென்னை துறைமுகத்திற்கு வந்துள்ளன. கடலோர பாதுகாப்பு தொடர்பாக இரு நாடுகளும் கூட்டு பயிற்சியில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




### 100 நாள் வேலை உறுதித் திட்ட நிதி கோரி

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் 18 இடங்களில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, மார்ச் 29-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. ஒன்றிய செயலாளர்களுக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள் வருமாறு:-

ஒன்றிய அரசு 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் இன்று (29.3.2025-சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் இடங்கள் பின்வரு மாறு:-



**அரக்கோணம் சட்டமன்ற தொகுதி**

1) அரக்கோணம் கிழக்கு -முள்வாய்,புளியமங்களம்,

2) அரக்கோணம் மத்தியம் தணிகை போளூர், வடமாம்பாக்கம்,

3) அரக்கோணம் மேற்கு சாலை பஸ்நிலையம், குருவராஜப் பேட்டை பஸ்நிலையம்,

4) நெமிலி கிழக்கு - சேந்தமங்கலம், கடம்பநல்லூர்

**சோளிங்கர் சட்டமன்ற தொகுதி**

5) நெமிலி மத்தியம் - கீழ்வீதி, நாகவேடு

6) நெமிலி மேற்கு - திருமால்பூர், மேலபுலம் புதூர்

7) சோளிங்கர் கிழக்கு - கூடலூர், பரவத்தூர்

8) சோளிங்கர் மத்தியம் கொடைக்கல் மோட்டூர், பானாவரம் கூட்ரோடு

9) சோளிங்கர் மேற்கு - வேலம், ஜம்புகுளம் கூட்ரோடு

10) காவேரிப்பாக்கம் தெற்கு - ஓச்சேரி, பெரும்புலிபாக்கம்

11) காவேரிப்பாக்கம் வடக்கு பன்னியூர் கூட்ரோடு, பானாவரம்

**இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி**

12) வாலாஜா மத்தியம் விசி மோட்டூர் அண்ணா சிலை அருகில், சிப்காட் பஸ்நிலையம் அருகில்,

13) வாலாஜா கிழக்கு - வள்ளுவம்பாக்கம், குடிமல்லூர்

14) ஆற்காடு மேற்கு - பூட்டுத்தாக்கு, உப்புப் பேட்டை

**ஆற்காடு சட்டமன்ற தொகுதி**

15) திமிரி கிழக்கு - மாம்பாக்கம், வாழைப்பந்தல்

16) திமிரி மேற்கு - காவனூர், தாமரைப்பாக்கம்

17) ஆற்காடு கிழக்கு - தாஜ்புரா, கலவை கூட்ரோடு

18) கணியம்பாடி - கணியம்பாடி, மூஞ்சூர்பட்டு

மேற்கண்ட இடங்களில் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நமது மாவட்டத்தில் உள்ள ஒன்றிய கழக செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்து கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கையில் கூறியுள்ளார்.